### மேயர் பிரியாராஜன் தலைமை! 5வது நாளாக சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட –

# திரு.வி.க. நகர் - எழும்பூர் தொகுதிகளில் 'மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம்"!

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு – மக்கள் தேவைகளைக் கேட்டறிந்தார்!

சென்னை, ஜன.7- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கொளத்தூர், அம்பத்தூர் வில்லிவாக்கம், திரு.வி.கநகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்களில் பொதுமக்கள் தேவைகளை கண்டறியும் சிறப்பு முகாம் நேற்று ஐந்தாவது நாளாக தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் நேற்று (06.01.2025) காலை 7.30 மணியளவில் திரு.வி.க. நகர், சட்டமன்றத் தொகுதி 6 வது மண்டலம், வட்டம்76 பாகம் 86, 87, 98 எழும்பூர் சட்டமன்ற தொகுதி 78 வது வட்டம் பாகம் 71, 72, 75, 77 ஆகிய பாகங்களில் மேயர் திருமதி. பிரியா ராஜன் தலைமையில்,

பகுதிக் கழகச் செயலாளர் சொ.வேலு முன்னிலையில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, செல்லப்பா தெருவில் உள்ள பட்டேல் பூங்காவை ஆய்வு செய்து விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி உபகரணங்களை புதுப்பிக்கவும், நடை பயிற்சி பாதையை சீர் செய்யவும், கழிவறையை சுத்தமாக வைத்திருக்கவும், கண்ணப்பர் தெரு மற்றும் படவட்டம்மன் கோவிலில் ஆய்வு செய்தும், சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் கட்டப்படும் புதிய வகுப்பறைகள் கட்டும் பணியையும் அருகில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ஆய்வு செய்து கழிவுநீர் அடைப்பை சரி செய்யவும், குழந்தைகளை பராமரிக்கும் அங்கன்வாடி மையம், வெங்கட் அம்மாள் சமாதி தெருவில் நடுநிலைப்பள்ளி ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்து அப்பகுதியில் உள்ள பொதுமக்களிடம் குறைகளை கேட்ட றிந்து தொடர்ந்து எழும்பூர் வடக்கு பகுதியில் அங்கன்வாடி அங்காளம்மன் கோவில் தெரு, சுப்ப நாயுடு தெரு ஆகிய தெருக்களில் ஆய்வு செய்து பொது மக்களிடமும் வியாபாரிகளிட மும் குறைகள் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வுகளின் போது மாமன்ற உறுப்பினர் தமிழ்செல்வி சசிக்குமார், வட்டகழக செயலாளர்கள்: எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன், ந.பாலு, சு.மனோகர் மற்றும் சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர் மானக் கழக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள மெட்ரோ ரயில் தலைமை அலுவலக கட்டடத்தில் நேற்று (06.01.2025) தமிழ்நாடு அரசின் கற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறைக்கான புதிய அலுவலகத்தை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் எம்.ஏ.சித்திக், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத். தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் தலைவர் முனைவர் என்.கிருஷ்ணகுமார், (ஓய்வு). தமிழ்நாடு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் கே.தீனபந்து, (ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாநகரப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ள

# 'சிங்காரச் சென்னை' பயண அட்டைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிமுகம் செய்தார்!

சென்னை,ஜன.7- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில், பாரத ஸ்டேட் வங்கி (SBI) மூலம் சிங்கார சென்னை பயண அட்டையை பொது மக்கள் பயன்பாட்டிற்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பாரத ஸ்டேட் வங்கி (SBI) மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகம் இணைந்து வழங்கும் சிங்கார சென்னை பயண அட்டை வாயிலாக பயணிகள் பயணச்சீட்டு பெற்று பயணம் மேற்கொள்ள ஏதுவாக போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேற்று (06.01.2025) மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

சிங்கார சென்னை பயண அட்டையானது, பயணிகளுக்கு தடையற்ற மற்றும் பணமில்லா பரிவர்த்தனை பயண அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தொலை நோக்கு திட்டமாகும். இவ்வட்டையை பேருந்துகள், மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ அமைப்புகள் உள்ளிட்ட பல போக்குவரத்து பரிவர்த்தனைகளுக்கு பயன்படுத்தலாம். இந்த முயற்சியானது, தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்தை டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் நவீனமய மாக்குவதற்கான தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகளில் ஒன்றாகும்.

மாநகர் போக்குவரத்துக் கழக அனைத்துப் பேருந்துகளிலும், ஏற்கனவே சிங்கார சென்னை பயண அட்டையை பயன்படுத்தும் வகையில், ETM (Electronic Ticketing Machine) உபயோகத்தில் உள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக 50,000 அட்டைகள் SBI மூலம் கட்டணமின்றி வழங்கப்படும். இவ்வட்டைகள் கோயம்பேடு, பிராட்வே, சென்ட்ரல் ரயில் நிலையம், தாம்பரம், பூந்த மல்லி, திருவான்மியூர், செங்குன்றம், வேளச்சேரி, கிண்டி, ஆவடி, தியாகராயநகர், அம்பத்தூர் தொ.பே, அம்பத்தூர் ஓ.டி, அடையாறு, அய்யப்பன் தாங்கல், கிளாம்பாக்கம், வடபழனி, ஸ்ரீபெரும்புதூர், பெரம்பூர், சைதாப்பேட்டை ஆகிய பேருந்து நிலையங்களில் உள்ள மாநகர் போக்குவரத்துக் கழக பயணச்சீட்டு விற்பனை மையங்களின் வாயிலாக வழங்கப்படும். இவ்வாறு கட்டணமின்றி வழங்கப்படும் அட்டைகளை, ரீசார்ஜ் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம். ஆன்லைன் போர்ட்டல்கள், கைப்பேசி பயன்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மாநகர் போக்குவரத்துக் கழக பயணச்சீட்டு விற்பனை மையங்கள் போன்ற பல் வேறு வழிகளில் இந்த அட்டையை எளிதாக ரீசார்ஜ் செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் இந்த சிங்கார சென்னை பயண அட்டையை பேருந்துகளில் நடத்துநர்களிடமும் ரீசார்ஜ் செய்ய விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்நிகழ்வின் போது, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன், அரசு விரைவு போக்குவரத்துக்கு கழக மேலாண் இயக்குநர் ஆர்.மோகன், பாரத ஸ்டேட் வங்கி உயர் அலுவலர்கள், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### தமிழ்நாட்டிற்கு விரோதமாக செயல்படும் ஆளுநரைக் கண்டித்து

# கடலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மஞ்சக்குப்பத்தில் இன்று நடைபெறுகிறது!

கடலூர், ஜன. 7 - தலைமைக் கழக அறிவிப்பின்படி தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் இன்று (7012025 செவ்வாக்கிழமை ஸ்ர) காலை 10 மணியளவில் கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெறும் என கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றவும் வித்தைகளைச் செய்யும் அதிமுக பாஜக கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் இன்று (07.01.2025 செவ்வாக்கிழமை) காலை 10 மணியளவில் கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

அது சமயம் ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், நகராட்சி, பேரூராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாவட்ட, ஒன்றியகுழு உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய குழுதலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி,

சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள்(பிஎல்ஏ), பூத் கமிட்டி உறுப்பினர்கள்(பிஎல்சி) மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கமிடு கின்றனர் என்று கிழக்கு மாவட்டக் கழகம் அறிவிப்பு தெரிவித்துள்ளது.

### தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த எல்.கணேசன் - புலவர் முத்து வாவாசிக்கு விருது!

#### விருதாளர்களுக்கு அமைச்சர், மாவட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் வாழ்த்து!

தஞ்சாவூர், ஜன. 7 – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் விருதுகளில் கழகத் தோழர்களால் முக்கிய விருதாக போற்றப்படும் பேரறிஞர் அண்ணா விருது மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் வழங்கப்படும் விருது தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த எல்.கணேசன் மற்றும் முத்து வாவாசி ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரோடு இந்தி எதிர்ப்பு போராட்டங்களை நடத்தி சிறைச் சென்றவர்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல்வேறு முக்கிய பொறுப்புகளில் பணியாற்றியவருமான தஞ்சை மத்திய மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கண்ணத்தங்குடி கீழையூர் கிரா மத்தில் பிறந்த எல்.கணேசன் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா விருதினையும்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் தமிழ்நாடு அரசின் சார்பில் முதல் விருதினை பெறுபவர் கலைஞர் அவர்களின் செயலாளராக பணியாற்றியவரும், இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் தொண்டாற்றிய வரும், முத்தமிழறிஞர் பற்றிய பல்வேறு நூல்களை எழுத்தியவருமான, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் பிறந்தவருமான முத்து வாவாசி அவர்களுக்கும் வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசின் விருது பெறும் கழக முன்னோடிகள் இருவரையும் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாண சுந்தரம்,எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ,

ச.முரசொலி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், தஞ்சை மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர்கள் சு.ப.தமிழழகன், அஞ்சுகம் பூபதி, மாவட்ட ஊராட்சிக் குழு துணை தலைவர் எஸ்.கே.முத்துச்செல்வம் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பகுதி, மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் நேரில் சந்தித்து வாழ்த்து கூறினர்.

சென்னை தீவுத் திடலில் நேற்று (06.01.2025) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற 49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் திறந்து வைத்து அரங்குகளை பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் பி.சந்தரமோகன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி. என். ஸ்ரீதர், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு - திருவள்ளூர் மேற்கு மாவட்ட

# வர்த்தகர் அணி சார்பில் 23 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. - வி.ஜி. ராஜேந்திரன் எம்.எல்.ஏ. அணிவித்தனர்!

திருவள்ளூர், ஜன.7 திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக வர்த்தகர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி தலைமை தாங்கினார். நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன் கடம்பத்தூர் ஒன்றிய செயலாளர் மோ.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் டி.சிவகுமார், கே.ஏ.மதியழகன், ஆர். கார்த்திகேயன், எ.கோபி, ஆர்.வாசு, என்.கேசவன், பி.ஆர்.பிரபாகரன், பீமன் டி.பால்ராஜ், கே.ஜி.ஆர். ராஜேஷ்குமார், டி.ரகுநாதன் ஆகியோர் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் எம். எல். ஏ., மாநில வர்த்தகர் அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம் ஆகியோர் கலந்துகொண்டு குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் கே.திராவிடபக்தன், மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதி சேஷன், ஒன்றிய செயலாளர் கூஞ்சூர் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, பொன். பாண்டியன், அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் களாம்பாக்கம் எம்.பன்னீர் செல்வம், சரஸ்வதி சந்திரசேகர், சி.சு.விஜயகுமார், என்.நந்தகோபால், தா. மோதிலால், ஆர்.மோகன சுந்தரம், பி.சரவணன், அ. பவளவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக வர்த்தக அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 23 குழந்தைகளுக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., காசிமுத்து மாணிக்கம் ஆகியோர் தங்க மோதிரங்களை அணிவித்தனர். உடன் சி.சு.ரவிச்சந்திரன், வி.எஸ்.நேதாஜி மற்றும் நிர்வாகிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.